**1.தனித்தேர்வர்கள் முதல்முறை மேல்நிலைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பிக்க இயலும் பாடப்பிரிவுகள் :**

| பாடக் குறியீடு | – | பாடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **304** | **–** | தமிழ் | ஆங்கிலம் | வரலாறு | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| **305** | **–** | தமிழ் | ஆங்கிலம் | பொருளியல் | அரசியல் அறிவியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் |
| **306** | **–** | தமிழ் | ஆங்கிலம் | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | இந்திய கலாச்சாரம் |
| **307** | **–** | தமிழ் | ஆங்கிலம் | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | சிறப்புத் தமிழ் |
| **308** | **–** | தமிழ் | ஆங்கிலம் | பொருளியல் | வணிகவியல் | கணக்குப் பதிவியல் | வணிகக் கணிதம் |

**2. தனித்தேர்வர்கள் தேர்விற்கு எங்கே விண்ணப்பிப்பது ?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். சேவை மைய விவரம் இந்த இணைய தளத்திலேயே வெளியிடப்படும்.

## 3. இரண்டாம்படி மதிப்பெண்சான்றிதழ் விண்ணப்பிக்கும் வழி முறைகள்:

மதிப்பெண் சான்றிதழின் இரண்டாம்படி வேண்டின் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் மீளவும் திரும்பப் பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது எனச் சான்றிதழ் பெற்று இரண்டாம்படிக்கான கட்டணம் செலுத்திய கருவூலச் செலுத்துச் சீட்டுடன் மாணவர் கடைசியாகப் பயின்ற பள்ளியின் தலைமையாசிரியர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் விண்ணப்பத்தினைப் பரிந்துரை செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வு விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். தனித்தேர்வர்கள் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ் மீளவும் திரும்பப் பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது எனச் சான்றிதழ் பெற்று இரண்டாம்படிக்கான கட்டணம் செலுத்திய கருவூலச் செலுத்துச் சீட்டுடன், அருகிலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியரிடம் அத்தாட்சிச் சான்றிதழ் பெற்று அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## 4. இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் விண்ணப்பிப்பதற்கான கட்டணம்:

(1) முதன்முறையாக இரண்டாம்படி கோரி விண்ணப்பிப்பவர்கள் ரூ.**505/–**

(2) இரண்டாவது முறையாக அதாவது மூன்றாம்படி கோரி விண்ணப்பிப்பவர்கள் ரூ.**755/–**

## 5. புலப்பெயர்ச்சிச் சான்றிதழை எவ்வாறு பெறுவது?

இந்த இயக்ககத்தால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு / மேல்நிலைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று ஏதேனும் ஒரு சான்றிதழ்களைப் பெற்றவர்களே விண்ணப்பிக்கத் தகுதியுடைவராவார்.
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் கோரும் மதிப்பெண் சான்றிதழின் அச்சுப் பகர்ப்பு நகல் மற்றும் உரிய கட்டணத்தை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட வங்கி வரைவோலை / கருவூலத்தில் செலுத்தப்பட்ட அசல் செலுத்துச் சீட்டினை இணைத்து இந்த இயக்ககத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

6. . புலப்பெயர்ச்சிச் சான்றிதழைப் பெறுவதற்கான கட்டணம்:

புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் பெறக் கட்டணமாக ரூ.505/–ஐ அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை – 6 என்ற பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வரைவோலை / தமிழ்நாடு அரசு கருவூலக் கிளைகளில் செலுத்துச் சீட்டின் மூலம் செலுத்த வேண்டும்.

## 7. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்:

| | |
|---|---|
| பத்தாம் வகுப்பு/ /தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு | இணை இயக்குநர் (பணியாளர்) |
| ஆங்கிலோ இந்தியன், மெட்ரிக் | கூடுதல் செயலாளர்(மெட்ரிக்) |
| மேல்நிலைத் தேர்வு | இணை இயக்குநர் (மேல்நிலை) |
| தொழில்நுட்பத் தேர்வு | கூடுதல் செயலாளர் (தொழில்நுட்பம்) |
| எட்டாம் வகுப்புத் தேர்வு | கூடுதல் செயலாளர் (தொழில்நுட்பம்) |

1. **What are the groups are eligible to Direct Private Candidate?**

| **SUB. CODE** | - | **SUBJECTS** | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 304 | - | Tamil | English | History | Economics | Commerce | Accountancy |
| 305 | - | Tamil | English | Economics | Political Science | Commerce | Accountancy |
| 306 | - | Tamil | English | Economics | Commerce | Accountancy | Indan Culture |
| 307 | - | Tamil | English | Economics | Commerce | Accountancy | Advanced Language (Tamil) |
| 308 | - | Tamil | English | Economics | Commerce | Accountancy | Business Maths |

2. **Where Private can Candidate apply for Examination?**

Candidates can apply through Nodal Centre. Nodal Centre details will be posted in this website.

**3. HOW TO APPLY DUPLICATE CERTIFICATE ?**

Students who have lost original certificate and in need of a duplicate should submit their application to the Headmaster of the school where the applicant has studied in the case of school candidates, duly filling in the application and remitting the fee for the issue of duplicate certificate for onward transmission to the Directorate of Government Examinations through DEO/DIET. A Certificate obtained from the Revenue official not below the rank of Thasildhar should be enclosed along with the application for authenticity of loss of original certificate. In case of Private Candidates Application may be submitted directly to the Directorate of Government Examinations as the case may be duly filing the Application form and remitting the prescribed fees with the Counter Signature of the Head Master of the nearby school. A Certificate obtained from the Revenue official not below the rank of Thasildhar should be enclosed for the authenticity of loss of original Certificate.

**4. FEES DETAILS FOR DPLICATE CERTIFICATE?**

(i) Applying for the first time as Duplicate Certificate Rs.505/-

(ii) Applying for the second time as Triplicate Rs. 755/-

**5. HOW TO APPLY MIGRATION CERTIFICATE?**

The filled up applications should be submitted along with Xerox copy of any one of the above mentioned certificates on the basis of which candidate is applying and demand draft of a Nationalized bank or else alternatively candidate can take challan towards fees prescribed by thisDepartment.

**6. MIGRATION CERTIFICATE APPLICATION FEES DETAILS?**

Fees for the Migration Certificate i.e., demand draft for Rs.505/- obtained from any Nationalized Bank or challan for Rs.505/- which payable through any of the Tamil Nadu State Government treasury branch in favour of Director of Government Examinations, Chennai – 600 006.

**7. CONTACT OFFICERS**

| | |
|---|---|
| SSLC / DEE | JOINT DIRECTOR ( PERSONNEL) |
| HIGHER SECONDARY EXAMINATION | JOINT DIRECTOR ( HIGHER SECONDARY) |
| MATRIC/ANGLO INDIAN | ADDITIONAL SECRETARY ( MATRIC) |
| TECHNICAL EXAM | ADDITIONAL SECRETARY ( TECHNICAL) |
| ESLC EXAM | ADDITIONAL SECRETARY ( ESLC) |
| | |